[2002 ஏப்ரல் 29

249—

## கோயிலைப் புதுப்பித்தல்

*16253—**திரு. ஜெக. வீரபாண்டியன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை தொகுதி, பெரியார் இராமசாமி தெருவில் உள்ள அருள்மிகு செல்வ விநாயகர் கோயில் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது பழுதுகள் சரிபார்க்கப்படும்?

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை நகரம், பெரியார் இராமசாமி நகர், அருள்மிகு செல்வ விநாயகர் திருக்கோயிலின் விமானம் பழுதுபார்த்தல், கருவறை பழுதுபார்த்தல் மற்றும் முன்மண்டபம் பழுதுபார்த்தல் ஆகிய பணிகள் உபயதாரர்கள் மூலமாகச் செய்யப்பட்டு நிறைவடைந்துள்ளன. இதர நிலுவைப் பணிகளான வர்ணம் தீட்டுதல், சுற்றுப்பிரகாரம் தளவரிசை அமைத்தல் ஆகிய பணிகளை விரைவில் நிறைவு செய்தபின், குடமுழுக்கு நடைபெறவுள்ளது என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய இந்த வினாவை 9 மாதங்களுக்கு முன்பு கேட்டிருந்தேன். மேற்படி திருக்கோயில் என்பது முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் **அவர்கள் இல்லத்திற்குப் பக்கத்தில் இருக்கிற காரணத்தால், அவர் மறைவுக்குப் பிறகு ரொம்பவும் பாழ்பட்டு இருந்தது. இப்போது நாங்கள்தான் செய்கிறோம். நீங்கள்தான் இப்போது ஜெயித்திருக்கிறீர்களே என்று கேட்டு என் தலைமையில் செய்யச் சொல்கிறார்கள். அந்த வேலையை தெருவாசிகளான நாங்களே சொந்தப் பொறுப்பில் செய்கிறோம். . . .

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2002 ஏப்ரல் 29]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெக. வீரபாண்டியன், **என்ற பெயர் வேண்டாம். ** வீட்டுக்குப் பக்கத்தில் இருப்பதால் பாழ்பட்டுப் போய்விட்டது என்று சொல்ல வேண்டாம். இது அற்புதமான கேள்வி. பெரியார் இராமசாமி நகர், அவருக்குப் பிடித்த விநாயகர் கோயில் பற்றிய கேள்வி. (சிரிப்பு) பதில் சொல்பவரும் ஈரோட்டு இராமசாமி. (சிரிப்பு)

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** சந்தோஷம். இப்போது நாங்களே சொந்தப் பொறுப்பில் கட்டிக் கொண்டிருக்கிறோம். என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால், எங்கள் பகுதியிலே சில குக்கிராமங்கள், ஆதிதிராவிடர் காலனிகள் போன்ற பகுதிகளில் மதமாற்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே அங்கே சிறு சிறு கோயில்களைக் கட்டித் தருவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை நகரம், பெரியார் இராமசாமி நகர், அருள்மிகு செல்வ விநாயகர் திருக்கோயில், சித்தர்காடு அருள்மிகு ஆலந்துறையப்பர் திருக்கோயிலின் உப கோயிலாகும். இத்திருக்கோயிலுக்கு என்று தனி வருமானம் இல்லை. அர்ச்சகர் சம்பளமாக ரூ. 2,640/- மற்றும் நித்தியப்படி படித்திறம் ரூ.1,800-ம் அருகில் உள்ள சித்தர்காடு கோயில் நிதியிலிருந்து செலவு செய்யப்படுகிறது. மேலும் இத்திருக்கோயிலில் தினசரி ஒருகால பூசை நடைபெற்று வருகிறது. வருடாந்திர விநாயகர் சதுர்த்தி விழா உபயதாரர்கள் மூலம் நடைபெற்று வருகிறது. தாங்கள் முன்வந்து அங்கே இருக்கின்ற, அந்தப் பகுதியில் இருக்கின்ற பக்தர்கள் மூலம் வசூல் செய்து அந்த ஆலயத்தை சிறப்புறச் செய்தால் வசதியாக இருக்கும் என்பதைத் தங்கள் மூலம் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய அறிவுரைப்படி நாங்களே அந்தத் திருப்பணியை நிறைவு செய்து முடித்துக்கொள்கிறோம். ஆனால் எங்கள் பகுதியில் குக்கிராமங்கள் பல இருக்கின்றன. சோழம்பேட்டை அருகில் கோழிகுத்தி என்ற கிராமத்திலும் அகர கீரங்குடி என்ற பஞ்சாயத்திலும், மேலமருதாந்தநல்லூர் என்ற ஊரிலும் காலனி பகுதியிலும் கோயில்கள் கிடையாது. அவர்கள் விரும்புகிறார்கள்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

பக்கத்திலே மதம் மாறுகிற வாய்ப்புகள் அங்கே இருக்கிற காரணத்தால், அந்த 3 பகுதிகளிலும், தமிழக அரசு நேரடியாகக் கோயில் கட்டுவதற்கு உதவிசெய்ய முன்வருமா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெக. வீரபாண்டியன், அரசாங்கம் எப்படிக் கோயில் கட்டிக்கொடுக்கும்? பக்தர்கள்தான் கட்ட வேண்டும்.

**மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கோயில் இல்லாத ஊரில் குடியிருக்கக் கூடாது' என்பது பழமொழி. அதற்கேற்ப, கோயில்களை நீங்கள் உங்கள் பகுதியில் ஏற்படுத்துவீர்களேயானால், அரசு அதற்கு அறநிலையத் துறையின் மூலமாக—வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்துகொண்டிருக்கிற ஆதிதிராவிட மக்களுடைய காலனியிலேகூட, இப்போது 100 ஆலயங்களைத் தேர்வுசெய்து, திருப்பணி நடத்துவதற்குப் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. அதேபோல—உங்களுடைய பகுதியிலே எந்தெந்த ஊர்கள் என்று கொடுப்பீர்களேயானால், இந்த ஆண்டு அங்கே அந்தக் கோயில்களில் பணி தொடங்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 250, திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**250—**

## ஆரணி மருத்துவமனை

***18931—திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆரணி, அரசினர் மருத்துவமனையிலுள்ள பிணவறை மிகவும் பழுதடைந்துள்ளதால், அதனை உடனடியாகச் செப்பனிட அரசு முன்வருமா?